காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்போரூர் வடக்கு ஒன்றியம் சார்பில் நடைபெற்ற திராவிட மாடல் அரசின் 2 ஆண்டு சாதனை விளக்க கூட்டம் மாவட்டச் செயலாளர், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைப்படி, திருப்போரூர் ஒன்றிய பெருந்தலைவர், திருப்போரூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் எல்.இதயவர்மன் தலைமையில் ராணி எல்லப்பன் வரவேற்புரையில் தி.க.பாளையம், செ.எல்லப்பன், கே.எ.டி.அன்பு, எ.பி.ஆர்.அசுந்தன், து.பாபு, து.ராஜா முன்னிலையில் நடைபெற்றது. உடன் ஜி.சி.அன்புசெழியன், செந்தமிழ்அரசு, மு.தேவராஜ், வீ.விஜயகுமார், எல்.ஜெயபால், ஏ.ரமேஷ், எஸ்.ராமகிருஷ்ணன், ஏ.கருணகரன், என்.ஜி.கெஜராஜன், வி.சந்திரன், க.கௌரிசங்கர், எஸ்.ஜெகதீப், வெ.சத்தியா, ம.ஜெகன், உள்ளாட்சி மன்ற பிரிதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, கிளை கழக, அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

### மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் பங்கேற்பு! நாகை ஒன்றியம் –

# ஐவநல்லூரில் அங்கன்வாடிக் கட்டிடம்!

### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தார்!

நாகை, மே 15- நாகை மாவட்டம் நாகை ஒன்றியம், ஐவநல்லூரில் அங்கன்வாடி கட்டிடம், அந்தனைபோட்டை ஊராட்சியில் நியாய விலை கடை, ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம், ஆழியூர் ஊராட்சியில் ஊராட்சி மன்ற கட்டிடம் என ரூ. 72.42 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் அ.அருண்தம்புராஜ் தலைமைத் தாங்கினார். நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன், நாகை சட்ட மன்ற உறுப்பினர் முகமதுஷாநவாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தார். வட்டார ஆத்மா குழு தலைவர் சிக்கல் என்.ஆனந்த் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை மற்றும் முன்னாள் படை வீரர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு நாகை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஐவநல்லூர் ஊராட்சி சவேரியார் கோயில் தெருவில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் மற்றும் 15 வது மானிய நிதியின் கீழ் ரூ. 11.62லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மைய கட்டடம், அந்தணப்பேட்டை ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ. 14.59 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டடப்பட்டுள்ள நியாய விலைக் கடை மற்றும் ராஷ்டிய கிராம சுவராஜ் அபியான் திட்டத்தின் கீழ் ரூ. 23.56 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலக கட்டடம் மற்றும் ஆழியூர் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ. 22.65 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலக கட்டடம் என மொத்தம் ரூ. 72,42 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களை திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் மாநில சுற்றுசூழல் அணி துணைச் செயலாளரும், தொகுதி பொறுப்பாளருமான ரஞ்சன்துரை, ஒன்றியக் குழு தலைவர் வி.அனுசியா, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சரபோஜி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மீ.செல்வகுமார், மற்றும் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் ஊராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள், உறுப்பினர்கள், ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

பின்னர் சுற்றுசூழல் காலநிலை மாற்றத்துறை மற்றும் முன்னாள் படை வீரர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எல்லோருக்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் ஆட்சியில் பொதுமக்களின் நலனை கருதி மகளிருக்கு இலவச பேருந்து பயணம், மக்களைத் தேடி மருத்துவம், இல்லம் தேடி கல்வி, போன்ற பல்வேறு நல்ல பல திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். வருகின்ற செப்டம்பர் 15ம் தேதி 1 கோடி குடும்பங்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் செயல்படுத்த உள்ளார்கள். நாகை ஒன்றியத்தில் ஐவநல்லூர், அந்தணபேட்டை, ஆழியூர் ஊராட்சிகளில் நியாய விலை கடை, அங்கன்வாடி கட்டிடம், ஊராட்சி மன்ற கட்டிடம் என ரூ. 72.42 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேட்டியளித்தார்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பெ.கீதா ஜீவன் விளாத்திகுளம் வட்டம் சிவலார்பட்டி கிராமத்தைச் சேர்ந்தமகேஸ்வரன் மற்றும் அருண்குமார் ஆகியோர் சிவலார்பட்டி கண்மாயில் 12.5.23 குளிக்கசென்ற போது எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர். அன்னாரது குடும்பத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து தலா இரண்டு லட்சம் வழங்கப்படும் என்று அறிவித்ததை தொடர்ந்து நேற்று 14.5.23 அன்னாரது குடும்பத்தினரை நேரில் சந்தித்து காசோலையினை வழங்கி ஆறுதல் கூறினார்.உடன் விளாத்திக்குளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்கண்டேயன், மாநகர செயலாளர் ஆனந்த சேகரன், மாவட்ட ஆட்சித்தலைவர் செந்தில் ராஜ் அவர்கள் ராதாகிருஷ்ணன் ஆகியோர் மற்றும் தி.மு.க. கழக நிர்வாகிகள் பலர் உடன் கலந்து கொண்டனர்.

### தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு தலைமையில் –

# வேளாண்மை - தோட்டக்கலை - வேளாண்மைப் பொறியியல் அலுவலர்கள் ஆய்வுக்கூட்டம்!

### காணொலி வாயிலாக நடைபெற்றது!

சென்னை, மே 15 - தலைமைச் செயலகத்தில், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு அவர்கள் தலைமையில், 2023-24 ஆம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கை அறிவிப்புகளின் முக்கியத்துவம் குறித்து மாநிலத்திலுள்ள வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மைப் பொறியியல் மற்றும் வேளாண்அறிவியல் மைய அலுவலர்களுடன்காணொலி மூலம் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது

கடந்த இரண்டு ஆண்டுகளில் வெற்றிகரமாக வேளாண் நிதிநிலை அறிக்கைகளில் உழவர் நலன் சார்ந்த அறிவிப்புகளை நலத்திட்டங்களை செயல்படுத்தியதன் தொடர்ச்சியாக 2023-24 ஆம் ஆண்டின் வேளாண் நிதிநிலை அறிக்கையானது, மூன்றாவது முறையாக வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் கடந்த 21.03.2023 அன்று சட்ட மன்ற பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. இவ்வேளாண் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அனைத்து அறிவிப்புகளையும் விவசாயிகளுக்கு விரைந்து கொண்டு சேர்க்கும் வகையில், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, நேற்று முன்தினம் (13.05.2023) வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மை பொறியியல், வேளாண்மை விற்பனை, சர்க்கரைத் துறை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், விதைச் சான்றுத் துறைகளில் பணியாற்றும் அனைத்து நிலை வேளாண் விரிவாக்க அலுவலர்களுக்கும் விரிவாக காணொலி மூலம் சிறப்புரையாற்றினார்கள்.

தொடர்ந்து, தலைமைச் செயலாளர் அவர்கள் தனது அறிவுரையில், விவசாயிகளிடம் அதிக எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியிருக்கும் வேளாண்மை நிதிநிலை அறிக்கையை சிறப்பாக கிராம அளவில் விவசாயிகளுக்கு கொண்டு செல்லும் வகையில் விரிவாக்க அலுவலர்கள் மேற்கொள்ளவேண்டிய பணிகள் குறித்து, தலைமைச் செயலாளர் அவர்கள், தமிழ்நாட்டின் அனைத்து வேளாண்மை விரிவாக்க அலுவலர்களுக்கும் நேர்முகக்கடிதம் ஒன்றை எழுதியிருப்பதாகவும், அனைத்து அறிவிப்புகளையும் வெற்றிகரமாக செயல்படுத்தி, கிராம முன்னேற்றத்தில் ஒரு உள்ளடக்கிய வளர்ச்சியை (Inclusive Growth) ஏற்படுத்தும் வகையில் விரிவாக்க அலுவலர்கள் சிறப்பாக பணியாற்ற வேண்டும் என்று எடுத்துரைத்தார்கள்.

மழைப்பொழிவு அதிகமில்லாத தமிழ்நாட்டில் பெய்யும் ஒவ்வொரு மழைத்துளியும் முக்கியம் என்று உழவர்கள் சேமிப்பதற்கு துறை அலுவலர்கள் உதவ வேண்டும் எனவும் சமவெளிப்பகுதிகளில் கால்வாய் தூர்வாரும் பணியில் உழவர் பெருமக்களையும் இணைத்து உரிய முறையில் பயனடைய உதவ வேண்டும் எனவும் கூறி நுண்ணீர் பாசனத்தை குறிப்பாக தோட்டக்கலைப் பயிர்களில் பெருமளவு ஊக்குவித்திட வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

களப்பணியின் முக்கியத்தைக் கூறுகையில், கோப்புகளைப் பார்க்கும் பணியல்ல உங்கள் பணி; தோப்புகளைப் பார்க்கும் பணி என்றும்; தபால்களைப் பார்த்து நடவடிக்கை எடுப்பதற்கு முன் பயிர்களைப் பாதுகாத்திட நடவடிக்கை எடுங்கள் என்றும்; அலுவலகத்தில் அமர்ந்து கண்காணிக்கும் பணியல்ல உங்கள் பணி; வரப்பில் நடந்து பயிர்கள் பச்சை தொற்றிக்கொள்வதைப் பார்க்கும் பணி என்றும் எவ்வளவு களப்பணி மேற்கொள்கிறோமோ அந்த அளவிற்கு வாழ்வில் வெற்றி கிடைக்கும் என்றும் விரிவாக்க அலுவலர்களுக்கு எழுச்சி ஊட்டினார்.

தொடர்ந்து, அங்கக வேளாண்மையின் முக்கியத்துவத்தை விவசாயிகளிடையே பரவலாக்கும் முயற்சியை வேளாண்மை விரிவாக்க அலுவலர்கள் முன்னெடுத்துச் சென்று, அங்கக வேளாண்மைக்கான இடுபொருட்களை கிராமங்களில் அதிகளவில் கிடைப்பதற்கு முயற்சிக்க வேண்டும் என்றும், ஒவ்வொரு வேளாண்மை அலுவலரும் தாங்கள் பணியாற்றும் பகுதிகளில் ஏதாவது ஒரு குக்கிராமத்தை தேர்வு செய்து அங்கு, அங்கக வேளாண்மைத் தொகுப்பு ஒன்றை உருவாக்குவதற்கு இலக்கு நிர்ணயிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்கள்.

ஏரி, குளங்களில் நீர் வற்றிய பின்னர், வண்டல் மண்ணை விளை நிலங்களுக்கு பயன்படுத்தும் வகையில், தற்போது வறண்டிருக்கும் ஏரி, குளங்களைக் கண்டறிந்து மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெற்று, நிறைய விவசாயிகள் பயன்படும் வகையில் இப்பணியை மேற்கொள்ள வேண்டும் எனவும் விவசாயிகளிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும் எனவும் தலைமைச் செயலாளர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

வேளாண் தகவல்களை விவசாயிகளுக்கு விரைவாக கொண்டு செல்வதில் தகவல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து வேளாண் விரிவாக்கத்தில் தகவல் தொழில் நுட்பத்தினை அதிக அளவில் பயன்படுத்தி தொழில் நுட்பங்களையும் திட்டப்பலன்களையும் விவசாயிகளுக்கு கொண்டு சேர்க்க வேண்டும். தேசிய மின்னணு வேளாண்மை திட்டம், இவாடகை மூலம் வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டம் போன்ற விரிவாக்க பணிகளை முனைப்புடன் செயல்படுத்த வேண்டும். உழுவதற்கும், நடுவதற்கும், களை பறிப்பதற்கும் ஆட்களை நியமித்தால் அதிக செலவாகும். உழவர்க்கு ஒன்றும் மிஞ்சாது. உழுபவர்களை அழுபவர்களாக ஆக்காமலிருக்க இயந்திரமயமாக்கலை பரவலாக்குங்கள் என்று கேட்டுக்கொண்டார்.

பயிர் சுழற்சி மூலம் மண் வளத்தைக் காக்க உழவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று கூறுகையில் மண்ணிடம் கூட நாம் மனிதாபிமானமாக இருந்தால், மண் நமக்கு அள்ளித்தரும். நெல்லுக்குப் பின் பயறுவகைப் பயிர்களைப் பயிரிட்டால் மண்ணின் வளம் அதிகரித்து அடுத்துப் பயிரிடும் நெல் நல் மகசூல் தரும்.

வயல்கள் பொய்க்கலாம்; மேழிச் செல்வம் பொய்க்காது; பயிர்கள் பொய்க்கலாம்; உயிர்கள் பொய்க்காது என்று உரைத்து, பயிருடன் கால்நடை பராமரிப்பு, கோழி, ஆடு வளர்ப்பு உள்ளிட்ட கலப்புப் பண்ணையத்தை ஊக்குவிக்க வேண்டும் எனவும் வேளாண்மை உற்பத்தியை உயர்த்துவதில் தரமான விதைகள், உயிர் உரங்கள், நுண்ணூட்டக் கலவை போன்ற இடுபொருட்களை தரமான முறையில் உற்பத்தி செய்து உரிய காலத்தில் விநியோகிக்க முனைப்புடன் செயல்பட வேண்டும், பராமரிப்பே இல்லாமல் பயனளிக்கும் பனை மரங்களை மாநிலத்தில் அதிகரிக்கும் வகையில், பனை மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்திட வேண்டும். பனை மரங்களில் முக்கியத்துவத்தை உணர்ந்து, பனை மரங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதுடன், பனை தொடர்பான ஆராய்ச்சியை வலுப்படுத்தி, பனை சார்ந்த பொருட்களின் மதிப்புக் கூட்டுப் பொருட்களின் உற்பத்தியை அதிகரித்து மக்களுக்கு தரமான பனை சார்ந்த பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்திட வேண்டும்.

விவசாயிகள் சாகுபடியோடு நின்றுவிடாமல், தரம் பிரித்தல், மதிப்புக்கூட்டுதலிலும் ஈடுபட்டு, விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் கிடைக்க உதவ வேண்டும். புவிசார் குறியீடு பெறுவதன் மூலம் விளை பொருட்களுக்கு மதிப்பு உயர்ந்து கூடுதல் விலை கிடைக்கும் என்பதால் புவிசார் குறியீட்டினை விரைவில் பெற துறை அலுவலர்கள் முயற்சிக்க வேண்டும் என்றும் தலைமைச் செயலாளர் அவர்கள் அறிவுரை வழங்கினார்கள்.

இறுதியில், வேளாண்மை விரிவாக்கம் என்பது வெறும் பணியல்ல: அர்ப்பணிப்போடு செய்ய வேண்டிய அறப்பணி; உங்கள் பணி பிழைப்பல்ல; இயற்கையின் அழைப்பு என்றும், விவசாயிகளுக்கு வேண்டிய அனைத்து விதமான பணிளையும் உழவர் நலன் சார்ந்த இதரத் துறை அலுவலர்களுடன் சிறப்புடன் மேற்கொள்ள வேண்டும். குறியீடு வேறு; குறிக்கோள் வேறு எனவே, இலக்கினை முன்வைத்துப் பணியாற்றாமல் ஏற்படுத்தக்கூடிய நல் மாற்றங்களை முன்னி றுத்திப் பணியாற்ற வேண்டும் என்று கூறினார்.

வேளாண் அலுவலர்கள் விவசாயிகளுக்கு உதவுதல் என்பது இறை வழிபாடுக்கு சமம் என்று எண்ணி, விவசாயிகளுடன் நெருங்கிப் பழகி புன்னகையுடன் விரிவாக்கப் பணியை செயல்படுத்த வேண்டும். அதன் மூலம் விவசாயிகளின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படும் என்று தலைமைச் செயலாளர் அனைத்து வேளாண்மை விரிவாக்க அலுவலர்களுக்கு எழுச்சியுரை ஆற்றினார்.

இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர், சி.சமயமூர்த்தி, முதன்மைச் செயலாளர் / சர்க்கரைத்துறை ஆணையர் சா. விஜயராஜ் குமார், வேளாண்மை இயக்குனர் ஆ.அண்ணாதுரை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை இயக்குனர், முனைவர் ச. நடராஜன், தமிழ்நாடு நீர் வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் செயல் இயக்குனர் த.அன்பழகன் உள்ளிட்ட உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புலவர் ஆடலரசு
### மே 15 (2007)

பொதுக்கூட்ட மேடைகளைப் பட்டிமன்றமாக – கவியரங்கமாக – வழக்காடு மன்றமாக மாற்றி பல்வேறு கோணங்களில் கழக கொள்கைகளை நாட்டு மக்கள் ஏற்கும் வண்ணம் நகரங்களிலும், குறிப்பாக கிராம.ப்புறங்களிலும் ஆற்றலோடு உரையாற்றியவர்.

கழகக் கொள்கைகளைப் பரப்பும் முகத்தான் "தியாகம்" எனும் தலைப்பில் நாடகம் இயற்றி தாமே அதில் நடித்தவர்.

கழகம் நடத்திய போராட்டத்தில் ஈடுபட்டு காவல்துறையால் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

1997ஆம் ஆண்டு கழகம் நடத்திய முப்பெரும்விழாவில் தலைமைக் கழகச் சார்பில், தலைவர் கலைஞர் அவர்கள் இவருக்கு "கலைஞர் விருது" வழங்கி சிறப்பித்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.


தோற்றம் 06.10.1939 மறைவு 14.05.1985

15.05.2023 (வைகாசி முதல் நாள்)

எங்கள் குடும்ப விளக்கு
சுயமரியாதைச்சுடர் பார்வதலெட்சுமி இராசன்

நீ இன்றி நான் இல்லை
உன்னை நினையாத பொழுதில்லை

அறந்தாங்கி இராசன்

தி.மு.க. சொத்து பாதுகாப்புக்குழு தலைவர்
சிவபர்வதம் இல்லம், சுப்பிரமணியபுரம் - 614 805
மற்றும்
பிள்ளைகள் – பேரப்பிள்ளைகள் – கொள்ளுப்பேரப்பிள்ளைகள்